யாழ்ப்பாணம்
12 MAR 2000
யாழ்ப்பாணம்




# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: i வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை ( 12 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 84


★ இராஜகிரிய குண்டு வெடிப்பைத் தொடர்ந்து

# தற்கொலையாளிகள் முப்படையினர்

# பதினொரு மணிநேர துப்பாக்கிச் சமர்

## குண்டை வெடித்து உயிரை மாய்த்தனர்

(கொழும்பு விசேட நிருபர்)

**கொழும்பு இராஜகிரியப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து பொறளை சேர்ப் பன்ரைன் தொடர் மாடிக் கட்டடத்தொகுதியின் 3 ஆம் மாடியில் அதி ரடிப்படையினர் உட்பட முப்படையினருக்கும் தற்கொலைக் குண்டுதாரி கள் எனச் சந்தேகிக்கப்படுவோருக்கு மிடையில் பதினொரு மணி நேர கடும் துப்பாக்கிச் சமர் இடம் பெற்றது.**

**இச் சமரின் போது தற்கொலைக் குண்டுதாரிகள் குண்டுகளை வெடிக்க வைத்து தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.**

கொழும்பு இராஜகிரிய குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து பொறளைசேர்ப் பன்ரைன் அரச விடுதிகளின் மூன்றாம் இலக்க மாடியின் 'சி' பிரிவில் இடம் பெற்ற நேரடி மோதலைச் சமாளிப்பது தொடர்பாக இராணுவத்தளபதியினால் உயர்மட்ட ஆலோசனை நடாத்தப்பட்ட பின் புதிய வியூகம் அமைக்கப் பட்டு 500 படையினர் மாடிக்கட்டடத்தை சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதல் சுமார் 11 மணித்தியாலம் வரை நீடித்தது, நேற்று அதிகாலை 5,30 மணிக்கு குண்டு தாரிகள் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டனர்.

இதன் பின் ஏனைய இரு குண்டு தாரிகளும் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்ட

( 8ஆம் பக்கம் பார்க்க)

## பார்வையிட்டனர்

[கொழும்பு]

இராஜகிரியவில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்தை பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய ஆகியோர் பார்வையிட்டனர். [வ-க]

நவீன ரக ஆயுதங்களுடன்

## மாடியை நோக்கி ஓடி வந்தனர் சிங்கள இளைஞர் வர்ணிப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இராஜகிரிய ஆயுள் வேத வைத்தியசாலைக்கு எதிர்ப்புறமாக இடம் பெற்ற குண்டுத் தாக்குதலின் பின் நால்வர் நவீன ரக ஆயுதங்களுடன் சேர்ப்பன்ரைன் அரச தொடர் மாடியை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன்.

இவர்களில் இருவர் மாடிக் கட்டட 3 ஆம் மாடியின் 'சி'

( 8ஆம் பக்கம் பார்க்க)

பலத்த பாதுகாப்பின்மத்தியில்

## பாரிய நவீனரக ஆயுதங்கள் அரச தொடர்மாடிக்கு வந்தது எப்படி?

### முப்படையினரும் அதிர்ச்சி!

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தும், வீதித் தடைகள் போடப்பட்டு சந்திக்கு சந்தி சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு மிகவும் பலமான ஒரு பாதுகாப்பு நிலையில் கொழும்பு நகர் இருந்த போதும் பெருந்தொகையான நவீனரக ஆயுதங்கள் நகரினுள் வந்தது எவ்வாறென முப்படையினரும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்,

குண்டுத் தாக்குதலை மேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவான ஆயுதங்களுடன் அடையாள அட்டையும் மீட்கப்பட்டது

பொறளை சேர்ப்பன்ரைன் அரச தொடர்மாடி கட்டத்தின் 3ஆம் மாடியில் உள்ள C. பிரிவில் பொலிஸாரினால் தீவிர பரிசோதனை செய்யப்பட்டபோது அங்கிருந்து ஆர்.பி.ஜி, ஏ.கே.47, ரி.56, ரக ஆயுதங்கள் துப்பாக்கிரவைகள் கிரனேட்டுக்கள் பெருமளவு மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இங்கிருந்து 4தேசிய அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த செல்வரெத்தினம் பொன்ராசா (வயது33)என்பவரை காணவில்லையென மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த8ஆம்திகதி புதன் கிழமை வீட்டிலிருந்து கோப்பாய்க்குச் செல்வதாகக் கூறி விட்டுச் சென்றவர் நேற்று வரை வீடு திரும்பவில்லையென்று அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## எத்தகைய குண்டுவெடிப்பு நிகழ்ந்தாலும் அவை பேச்சுக்களை குழப்பமாட்டாது

### அமைச்சர் டி.எம், ஜெயரத்தின

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எந்த ஒரு நெருக்குதல்கள் வந்தபோதும் இனப்பிரச்சினை தீர்விற்கான பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் உறுதியாகவே இருக்கிறது.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளர் டி. எம். ஜெயரெத்தின கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குறித்து மேற்கண்டவாறு தெரிவித்

[8 ஆம்பக்கம் பார்க்க]

## எச்சந்தர்ப்பத்திலும் புலிகளுடன் பேசத்தயாராக உள்ளேன்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு இராஜகிரியவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பின்பு தொலைக் காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க புலிகளுடன் பேசுவதற்குத் தயார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா நலன்புரி நிலையத்திற்கு

## வெளியே தங்குவதற்கு 80குடும்பங்களுக்கு அனுமதி

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியிலிருந்து வவுனியாவிற்கு வந்து அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களில் 80 குடும்பங்கள் வெளியே சென்று தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களின்

[8ஆம் பக்கம் பார்க்க]

க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்த

## தொண்டர் ஆசிரியர் விபரங்களை வ.கி.மகா.கல்வி அமைச்சு கேட்டுள்ளது

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலையில் நாலாயிரத்து 100 தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுவதாக குறித்த கல்வி வலயங்கள் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கடற்றொழிலாளரைத் தாக்கியது

# மிகக் கொடூரமான செயல்

### பாராளுமன்றில் ஜெகன் எம்.பி. ஆவேசம்

(கொழும்பு)

குருநகர்க் கடற் பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளர்கள் கடந்த 7ந் திகதி கடற்படையினரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் முதலாந்திகதி தொடக்கம் அதிகாலை 5மணிமுதல் பிற்பகல் 4மணி வரை மீன்பிடிப்பதற்கு இராணுவ கடற்படையினர் அனுமதித்த போதிலும் கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும்கொடுமையானது இக்கொடூரச் செயலைச் செய்தவர்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

கல்வியங்காட்டில் தொலைத்தொடர்பு, பான்சி கடைகளுக்கு யுவதிகள் உடன் தேவை. விபரங்களுக்கு வலம்புரி விளம்பர இல 225 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(225)


## (இராசி பலன்)

12.03.2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மாசி 29)

ஸப்தமி இரவு 2.14 வரை, ரோகினி நள்ளிரவு 3.15 வரை, சித்தயோகம் இராகு காலம் மாலை 5.24 முதல் 6.53 வரை, சுபநேரம் மாலை 9.50 முதல் 11.20 வரை.

**மேடம்:**
அவசர நிர்ப்பந்தம், மனத் தளர்ச்சி, குடும்ப விரோதம்,

**இடபம்:**
சகோதர அனுகூலம், சமூக சேவை, கடித உறவு.

**மிதுனம்:**
வீண்பழி, ஆசாரக்குறைவு. எதிர்பாராத செலவு.

**கடகம்:**
அயலவர் பாராட்டு, மனைவி பெருமை புத்திரர் உபதேசம்.

**சிங்கம்:**
கருத்துத்தெளிவு, தெய்வ பக்தி. தாயன்பு.

**கன்னி:**
தொழில் சங்கடம், பெண் பகை, ஆதரவற்ற நிலை.

**துலாம்:**
போராட்ட உணர்வு, மனைவிதுயர், யோசனை.

**விருச்சிகம்:**
வாக்கு நாணயம், மன நிறைவு, காரியசித்தி.

**தனுசு:**
நண்பர்கலகலப்பு, ஆடம்பர செலவு, காதல்சிறப்பு.

**மகரம்:**
சபலநினைவுகள், அபிப்பிராய பேதம், தொழில் சிறப்பு.

**கும்பம்:**
மாறாட்டம், கணவர் வெறுப்பு, அகங்காரம்.

**மீனம்:**
பெரியோர் ஆசி, காதல் களிப்பு, சகோதரிநினைவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)
-அனுஷியா

## பஸ்சேவை நீடிப்பு

(செம்பியன்பற்று)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் இதுவரை காலமும் பருத்தித்துறையிலிருந்து நாகர்கோயில் வரை நடந்தப்பட்டுவந்த பேருந்து சேவை தற்பொழுது செம்பியன்பற்றுவரை விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

இதனால் கடந்த காலங்களில் போக்குவரத்து தொடர்பாக மக்கள் எதிர் நோக்கிய சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

தற்பொழுது மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி சுமார் 17 வருடங்களிற்குப் பின் இங்கு புத்தாயிரமாண்டில் பேருந்து சேவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (க-42)

### பேராதனைப் பல்கலைக்கழக

## வெளிவாரிப் பரீட்சை (ஜி. ஏ. கியூ) கிழக்குப் பல்கலையில் நடாத்த முயற்சி

(மட்டக்களப்பு)

எதிர் வரும் ஏப்ரல் மாதம் பேராதனைப் பல்கலைக் கழகம் நடாத்தும் G. A. Q. வெளிவாரிப் பரீட்சையை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கான முயற்சிகளைக் தபால், தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 300 பரீட்சார்த்திகள், கண்டி மாவட்டத்திற்குச் செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு மேற்படி பரீட்சையை மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் நடாத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எம். எஸ். மூக்கையா, பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் குணவர்த்தன ஆகியோருடன் தபால், தொலைத்தொடர்புகள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

(க-60)

## தொடரும் இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் கோயில் தசதின இலட்சார்ச்சனை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகிறது.

தினமும் பிற்பகல் 3மணிக்கு அபிஷேக ஆராதனையும் 5மணிக்கு அர்ச்சனையும் நடைபெறும்.

இங்கு இலட்சார்ச்சனை, தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று பத்தாம் நாள் 19ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறுகின்ற 64உபசார விசேட பூசை வழிபாட்டுடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

(க)

## வருடாந்தப் பொங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கிழக்கு மாமுனை ஸ்ரீ. நாகதம்பிரான் ஆலய வருடாந்தப்பொங்கல் உற்சவம் 19.03.2000 ஆம் திகதி பங்குனி உத்தரத்திலன்று நடைபெறும்.

(க-42)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேச சனசமூக நிலையத்தில நிர்வாக உத்தியோகத்தர் தேர்தல் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரினால் நடாத்திவைக்கப்பட்டது.

திரு. சு. பரம்சோதி தலைவராகவும், திரு. பா. வசீகரன் செயலாளராகவும், திரு. து. துஷ்யந்தன் பொருளாளராகவும் தெரிவாகினர்.

7 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (க)

## பரிசளிப்பு நிகழ்வு

(மந்திகை)

பருத்தித்துறை மெதடிஸ்த கல்விநிலையத்தின்வருடாந்த பரிசளிப்புவிழா இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் கல்வி நிலைய நிர்வாகி ஜெ. எஸ். நல்லதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை முகாமைக் குரு பி. கே. மேதர் பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்கிறார். [க-23]

## கொக்கி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ரீதியான கொக்கி விளையாட்டுப் போட்டி நாளை 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எ, எவ். ஜெயரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

(14)

## நடமாடும் வைத்தியசாலையாக கோப்பாய் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ்

(அச்சுவேலி)

அண்மையில் கோப்பாய் ஆஸ்பத்திரிக்கென வழங்கப்பட்ட அம்புலன்ஸ் இம் மாத முற்பகுதியில் இருந்து சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 7 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரைக்கும் நடமாடும் மலேரியா இரத்தப் பரிசோதனை சேவைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

மேற்படி சேவைக்குவைத்தியர்களையும், நிபுணர்களையும், தாதிமார்களையும் ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் அம்புலன்ஸ் குறித்த நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கோப்பாய் ஆஸ்பத்திரியிலேயே தரித்து நிற்குமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நடமாடும் மலேரியா இரத்தப் பரிசோதனையானது தென்மராட்சி மற்றும் அதனையண்டிய பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம்தலைமையில் நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. [க-57]

## மருமகனின் அகோரத் தாக்குதலினால் மூன்று பெண்கள் ஆஸ்பத்திரியில்

### பழைய பகைமை காரணமாம்

பழைய குடும்பத் தகராறு காரணமாக மதுபோதையில் வீட்டிற்கு வந்த மருமகனினால் ஒரே வீட்டைச் சேர்ந்த 2½ வயதுக் குழந்தையுட்பட 3 பெண்கள் தாக்கப்பட்ட சம்பவமொன்று மிருசுவில் தவசிகுளத்தில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் சிதர்சினி [வயது2½], யோ: மேரி அனிதா[வயது14], ஜோ. பத்மதிரேசா[வயது48] என்பவர்களே காயமடைந்தவர்களாவர். இவர்கள் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக்சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [க]



''தாயும் நீயே தந்தையும் நீயே''

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் திருநெல்வேலி

# பவள விழா

12 - 03 - 2000 ஞாயிற்றுக்கிழமை
நிகழ்வுகள் காலை 9.00 - மாலை 5. 30
காலை 9.00 - 1.00

9- 00 - தேவாரம்: இல்லச்சிறார்

9- 10 - தலைமையுரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம், பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

9- 20- இந்துபோர்ட் இராசரத்தினம் நினைவுக் கருத்தரங்கு:
கருப்பொருள்:
**இலங்கையில் கி. பி. 1900 - 1960 வரையிலான கல்வி**

தலைமையுரை:
பேராசிரியர் வ. ஆறுமுகம்
(பேரவை உறுப்பினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

9 - 50 - கருத்துரை:
**"வரலாற்றுப் பின்னணி"**
திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
(முதுநிலை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

10 - 35 - கருத்துரை:
**"கல்வி நிறுவனச் செயற்பாடுகள்"**
கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாண மாவட்டம்)

11 - 20 - கருத்துரை:
**"யாழ்ப்பாணத்தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம்"**
பேராயர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன்
(தென்னிந்தியத் திருச்சபை ஆண்டகை)

12- 05 - கருத்துரை:
**"சைவ வித்தியா விருத்திச் சங்கமும் எதிர்காலக் கல்வியும்"**
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(வருகை ஆய்வாளர், மொழியாய்வு நிறுவனம் கக்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்)

12- 50- நன்றியுரை:
திரு. இ. குகதாசன்
(பணிப்பாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்)

1 - 00 - பெற்றோர் ஒன்றுகூடல்:
மாலை 2. 30 - 5. 00

2 - 30 - தேவாரம்: இல்லச்சிறார்

2 - 40 தலைமையுரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம், பட்டபின் படிப்புகள் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

2 - 50 - பிரதமவிருந்தினர் உரை:

3- 00 - இசை நாடகம்:
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்
வழங்கும்
**"வள்ளி திருமணம்"**
தயாரிப்பு, நெறியாள்கை
திரு. கி. விசாகரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

5 - 00 - நன்றியுரை:
திரு. க. நித்தியானந்தன்
(பணிப்பாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்)

இவ்விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர். அ. சண்முகதாஸ்
தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
பட்டபின் படிப்புகள் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

சோ. பத்மநாதன்
செயலாளர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(கி-121)

யாழ்ப்பாணம்

## மட்டக்களப்பு வாசிகள்

# நால்வரின் விடுதலை குறித்து கொழும்பு உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி கொத்தணி அமைப்பாளர்கள், மற்றும் மட்டக்களப்பு வாசிகள் நால்வரின் விடுதலை கோரி கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குகள் அடுத்து வரும் நாட்களில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-60)

## புதிய கற்கை நெறிகள்

[அரியாலை]

தென்னிந்தியத் திருச்சபையின் தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல், கேக்ஐசிங், சிகையலங்காரம், பூவேலை, தமிழ். ஆங்கில தட்டச்சு - சுருக்கெழுத்து ஆகிய கற்கை நெறிகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

மேற்படி பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 13 ஆம் திகதிக்கு முன் 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறுநிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்

# மூன்று எக்ஸ்ரே இயந்திரங்கள் வடபகுதிக்கு அனுப்பிவைப்பு

(புலோலி)

பருத்தித்துறை, சாவகச்சேரி தெல்லிப்பழை வைத்திய சாலைகளுக்குச் சுகாதாரத் திணைக்களம் 3 எக்ஸ்றே இயந்திரங்களை அனுப்பிவைத்துள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட இம் மூன்று எக்ஸ்றே இயந்திரங்களும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, நெல்லிப்பழை வைத்தியசாலைகளுக்கு எக்ஸ்றே இயந்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதும் அவ்வைத்திய சாலைகளில் எக்ஸ்றே தொழில் நுட்ப வியலாளர்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தற்போது சிறிய எக்ஸ்றே இயந்திரம் ஒன்றே இயங்கி வருகின்றது. சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்ட பெரிய எக்ஸ்றே இயந்திரம் ஒன்றும், அதன்பின்னர் அனுப்பிவைக்கப்பட்ட இன்னொரு எக்ஸ்றே இயந்திரம் ஒன்றும் இதுவரை பொருத்தப்படாமல், செயற்படாமல் இருக்கின்றன.

கொழும்பிலிருந்து தொழில் நுட்பவியலாளர்களும், சிலபொருட்களும் கொண்டுவரப்பட்டன பின்னரே இந்த எக்ஸ்றே இயந்திரங்கள் பொருத்தப்பட்டு செயற்படுத்தப்பட முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-52)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள், நாளை பி.ப 2.00 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜீ.ரி.சற் நிறுவனத்தின் சார்பில் திரு. எபர்ஹட் ஹல்பா கலந்துகொள்வார்.

(க)

★ ★ ★

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலய சிரேஷ்டபிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 15 ம் திகதி அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் பாடசாலை வெளி மைதானத்தில் நடைபெறும்

(க-14)

## ஓய்வூதியர் சங்கங்கள் இணைவு

(புலோலி)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேசசெயலர் பிரிவில் இயங்கிவந்த வடமராட்சி ஓய்வூதியர் சங்கத்துடன் வடமராட்சி வடக்கு-கிழக்குப்பிரிவு ஓய்வூதியர் சங்கமும் இணைந்துள்ளது.

இந்த வடமராட்சி ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராக எஸ். குமாரசுவாமியும் செயலாளராக சட்டத்தரணி. ஆர். உருத்திராவும் (யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)தெரிவு செய்யப்பட்டனர்.

வடமராட்சிப்பகுதியில் உள்ள சகல ஓய்வூதியர்களும் வடமராட்சி ஓய்வூதியர் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளலாமென சங்கச் செயலாளர் சட்டத்தரணி. ஆர். உருத்திரா அறிவித்துள்ளார்.

# தீக்காயங்களுக்குள்ளான நபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் திருத்துமிடத்தில் பெற்றோல் தாங்கியிலிருந்து பெற்றோல் வெளியே கசிந்து கொண்டிருந்த போது. அருகில் இருந்த நெருப்புத்தணலில் இருந்து தீ பரவியதால் மோட்டார் திருத்துநர் எரிகாயங்களிற்கு உள்ளானார்.

மேற்படி சம்பவம் ஆணைக்கோட்டை நாலாம் கட்டை மோட்டார் சைக்கிள் திருத்மிடத்தில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் நா. முகிலன் (வயது-22) என்பவர் இடது கால்முழுவதும் தீப்பிடித்து எரிந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க)

## தடகள விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாபெரும் தடகள விளையாட்டு விழா இன்று நயினாதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது

தீவுப்பகுதிதெற்குப்பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில்நடைபெறும்இந்நிகழ்விற்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ)

★ ★ ★

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்று இரண்டு மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில்இடம் பெறுகிறது.

(க-23)

## வருடாந்த மஹோற்சவம்

காரைநகர் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) வருடாந்த மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

பஞ்ச இரத பவனி 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் மறுநாள் திங்கட்கிழமை 10.00 மணிக்குதீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(க-36)

## புதிய லொறி கொள்வனவு

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் 12இலட்சம் ரூபாவுக்கு புதிய லொறி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது தற்போது இந்த லொறிக்கான உடற் கோப்பு அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு லொறி இல்லாமையால் ப.நோ,கூ. சங்கத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது,

(க-52)

## பாலம் திருத்தம்

(ஈச்சமோட்டை)

மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட, யாழ். கண்டி வீதியின் அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள பாலமொன்று, யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் திருத்தப்பட்டுவருகின்றது.

(க-59)

# அதிஷ்ட எண்களின் இரகசியம்

## (சோதிட பலன்)

உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் பலகோடி மைல்களுக்கப்பால் சஞ்சாரம் செய்யும் கிரகங்களின் ஆட்சிக்குட்பட்டே இயங்குகின்றன. இதனால் உலகில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் கிரகங்களுக்கும் இடையில் மிகநெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஒன்பது கிரகங்களுள் சந்திரனை எடுத்துக் கொள்வோமானால் பௌர்ணமியன்று கொந்தளிக்கின்ற கடல் அமாவாசையன்று அடங்கிவிடுகின்றது. இதேபோல ஒரு மனநோயாளி பௌர்ணமி தினத்தன்று தனது மனநோயைக் கட்டுப்படுத்த முடியாமல் உச்சநிலையை அடைவதும் கண்கூடாக காணமுடிகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மனிதனுக்கும், சந்திரனுக்கும் இடையிலுள்ள ஈர்ப்புச் சக்தியைக் கருத்திற்கொண்டு பௌர்ணமியன்று இதன் தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதால் அத்தினத்தில் பெரிய சத்திர சிகிச்சைகள் தவிர்க்கப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்குரிய காரணம் அன்று சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதனால் குருதி (இரத்தம்) வெளியேறுவதைக் கட்டுப்படுத்த பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு கிரகங்களில் சிறியதாகக் காணப்படும் சந்திரனுக்கே இவ்வளவு வலிமை காணப்படுமானால் அதனைவிடப் பல மடங்கு பெரியதாகவுள்ள ஏனைய கிரகங்களின் சக்தி நிச்சயமாக மனிதனில் பிரதிபலிக்கும் என்பதில் ஐயமில்லை.

### கிரகமும் எண்ணும்

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு''

அன்று அருளினார் திருவள்ளுவப் பெருந்தகை இதையே நடைமுறையில் ''எண்ணில்லாதவர் கண்ணில்லாதவர்'' எழுத்தில்லாதவர், கழுத்தில்லாதவர் என்ற பழமொழியாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இதன் அர்த்தம் யாதெனில் எண் காலத்தை அளக்க உதவும் அளவுகோல், எனவே சரியான காலத்தை அறிந்து கொள்ளாமல் வாழ்பவர் குருடர்போல் அடிக்கடி தடக்கி விழுவதுடன் தோல்விகளைச் சந்திக்கின்றனர். ஒவ்வொருவரதும் பெயர்களும் எழுத்தினாலேயே வழங்கப்படுகின்றன. இதனால்த்தான் சரியான பெயர் அமையாதவர்கள் நிமிர்ந்து பெரிய பிரமுகர்களாக வரமுடியாது.

எண்சோதிடம் என்பது கிரகங்களை எண்களால் குறிப்பிடும் ஒரு முறையாகும். இதனால் நம் முன்னோர்கள் கணிதத்தைக் கொண்டு எல்லாப்பொருட்களையும் குறிப்பிட முயன்றபோது 9 எண்ணையே முடிவான எண்ணாக இருப்பதாக உணர்ந்தனர். இதனால் எல்லாப் பொருட்களையும் 9 வகையாகப் பிரித்தனர். நவக்கிரகங்கள், நவகனியங்கள், நவரத்தினங்கள், என்றவாறு பிரிப்பதுடன் இந்த 9 உடன் எந்த இலக்கத்தைச் சேர்த்தாலும் முடிவாக 9 வருவதை அவதானிக்கலாம்.

$$9 \times 1 = 9 = 0 + 9 = 9$$
$$9 \times 2 = 18 = 1 + 8 = 9$$
$$9 \times 3 = 27 = 2 + 7 = 9$$
$$9 \times 4 = 36 = 3 + 6 = 9$$
$$9 \times 5 = 45 = 4 + 5 = 9$$
$$9 \times 6 = 54 = 5 + 4 = 9$$
$$9 \times 7 = 63 = 6 + 3 = 9$$
$$9 \times 8 = 72 = 7 + 2 = 9$$
$$9 \times 9 = 81 = 8 + 1 = 9$$

ஒன்றிலிருந்து ஒன்பது வரையான எண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகத்தின்ஆதிக்கத்தைக்கொண்டுள்ளன. அவற்றையே நவக்கிரகங்கள் என்கின்றோம்.

1 - சூரியன் (sun)
2 - சந்திரன் (moon)
3 - வியாழன் (tuPitor)
4 - இராகு (urenus)
5 - புதன் (mercury)
6 - சுக்கிரன் (venus)
7 - கேது (neptune)
8 - சனி (saturn)
9 - செவ்வாய்(mars)

★ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர்பாருங்கள் எண் 1 இல் பிறந்தவர்கள் விசேட பலன்கள் வெளிவரும்.

சி.ஜி. திருமால்



## தவக்கால சிந்தனை

### 5 ஆம் நாள்

''காலம் நிறைவேறிவிட்டது. கடவுளரசு நெருங்கிவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்''

இன்றைய நாளில் கிறிஸ்து எமக்கு விடுக்கும் செய்தி இதுவே. கடவுள் ஒருவருக்கே உலக நிறைவின் காலநேரம் தெரியும். வேறு ஒருவருக்கும் அது தெரியாது என கிறிஸ்துவே கூறுகிறார்.

ஆனால் எம் வாழ்வில் இறைவனுக்கு உகந்த வழியில் வாழ எமக்கு எவ்வளவோ அழைப்பு விடுக்கப்பட்டும் சந்தர்ப்பம் தரப்பட்டும் நாம் அனைத்தும் அறிந்தவர் போல் காலம் தாழ்த்தி, பிறகு பார்ப்போம் எனக்கூறி உலக மாயைகளிற்கு உட்பட்டு பல சோதனைகளிற்குள் அகப்பட்டு இறைவார்த்தைகளை ஏற்க மறுக்கின்றோம்.

துன்பவேளைகளில் அவரை மறுதலித்தே விடுகிறோம். ஆனால் யேசு கூட நாற்பது நாள் நோன்பிருந்த வேளை சாத்தானால் சோதிக்கப்பட்டார்.

எனினும் அவர் இறைவன் மீது கொண்ட பற்றும், தன்னம்பிக்கையும், இறையரசு பற்றிய அவரது இலட்சியமும் அவற்றை இலகுவாக வெல்ல துணை நின்றன.

அப்படியானால் கிறிஸ்துவை இறைமனிதனாக ஏற்று அவரையே அணிந்துள்ள எம்மால் மட்டும் ஏன் அத்தகைய தடைகளை வெல்ல முடியாது!

கிறிஸ்து இறை தந்தையின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து கையளித்தார். ஏன் கிறிஸ்துவின் உடலின் உறுப்பினராகிய நாம் மட்டும் மனதைக் கல்லாக்கி நற்செய்தியை வாசிப்பதிலும், பயன்படுத்துவதிலும், செவிமடுப்பதிலும் பின்நிற்கின்றோம்.

கிறிஸ்துவின் சாட்சியாக வாழ வேண்டிய நாம் இப்படிச்செய்யலாமா? எனவே இந் நிலையில் இருந்து மீள எம்மைத் தயார் படுத்துவோம்.

எம் கிறிஸ்தவ வாழ்வை சீர் செய்து பார்க்க தரப்பட்ட இத்தவக்காலத்தில் ஒவ்வொரு நாளிகையும் இறைவனுடையது.

எனவே எம்மரணம் பற்றி எமக்கு எதுவும் தெரியாதாகையால் முடிவில்லா மீட்பு பெற விரும்பியவர்களாய், மனம் மாறி, நற்செய்தியை ஏற்று, நற்செய்தியின் தூதுவராய் மாறி கிறிஸ்துவிற்கு சாட்சி பகர்வோம்.

- செல்வி வெ. சண்முகலிங்கம்.

# நைஜீரியாவில் தொடரும் வன்முறை

## ஊரடங்கு உத்தரவும் அமுல்

(லாகொஸ்)

நைஜீரியாவின் தென்மேற்குப் புறநகரான ஒசுன்னில் கடந்த 43 நாட்களாக இடம் பெற்றுவந்த வன்முறைகளை அடுத்து அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அப்பகுதியில் வாழ்ந்து வரும் இருவேறுபட்ட சமூகத்தினரிடையே காணி, அரசியல் போன்றவற்றில் ஏற்பட்ட பிரச்சினைகளே வன்செயலாக உருவெடுத்துள்ளது.

இதனால் அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் இறந்தும் பல்லாயிரக்கணக்கானோர் பாதுகாப்பின்மை காரணமாக இடம்பெயர்ந்து வருவதையும் அடுத்தே அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையிலும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத நிலைமை ஏற்பட்டதை அடுத்து நைஜீரியாவின் ஏனைய பகுதிமக்கள் 'பொலிஸாரின்' உதவியை நாடி இருப்பதாகவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. [க-9]

### நேபாளம் பூட்டான்

## தலைவர்கள் மட்டப்பேச்சு இன்று அகதிகள் பிரச்சினையும் ஆராயப்படும்

(திம்பு)

நேபாளத்துக்கும் பூட்டானுக்கும் இடையேயான இழுபறி நிலைக்குக் காரணமான அகதிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கான இருநாட்டு தலைவர்கள் மட்டப் பேச்சுக்கள் இன்று இடம்பெறலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

அண்மையில் திம்புவின் இருநாடுகளுக்கும் இடையே நடைபெற்ற அமைச்சரவை மட்ட சந்திப்புக்களுக்குப் பிறகே தலைவர்கள் சந்தித்துப் பேசுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுமானவரையில் தலைவர்களுக் கிடையிலான சந்திப்புக்களில் அகதிகள் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என நம்புவதாகவும் நேபாள வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில்,

சுமார் 7 இலட்சம் பூட்டான் அகதிகள் தற்போது நேபாளத்தில் தங்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க.9]

# பாகிஸ்தானுக்கான எனது விஜயம் அவ்அரசை ஆதரிப்பதாக அமையாது

### அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானிற்கு நான் மேற்கொள்ளவிருக்கும் விஜயமானது அந்நாட்டு இராணுவ ஆட்யை நான் ஆதரிப்பதாக யாரும் அர்த்தம் கொள்ள வேண்டாம். அவ்வாறு அர்த்தம் கொண்டால் அது பொருத்தமானதாக அமைய மாட்டாது என அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற் கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் வழியில் பாகிஸ்தான் செல்வதென எடுக்கப்பட்டுள்ள முடிவானது அமெரிக்காவின் தேசிய நலன்களைக் கருதியே மேற்கொள்ளப்பட்ட ஒன்று.

இதன் மூலம் பாகிஸ்தானில் மீளவும் ஜனநாயகத்தை நிலை நாட்டவும் இந்திய-பாகிஸ்தான் மோதலை தணித்து சமாதானத்தை ஏற்படுத்தவும் முடியுமெனில் நான் மிகவும் சந்தோசம் அடைவேன் எனவும் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

25 ஆம் திகதி கிளிங்டனின் பாகிஸ்தான் பயணம் குறித்து பாகிஸ்தானில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. [க-9]

## 700 இலட்சம் ஆண்டுகள் முற்பட்ட டைனோசர் எலும்புக்கூடு மீட்பு

### இந்தியாவில் சம்பவம்

(புதுடில்லி)

இந்திய மீகாலயா மாநிலத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள், சுமார் 700 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகக் கருதப்படும் டைனோசர் குட்டியினுடைய எலும்புக்கூடொன்றினை மீட்டுள்ளார்கள்.

வங்கதேச எல்லையை ஒட்டிய மலைப்பகுதி ஒன்றில் எண்ணெய் வளம் அடையாளம் காணும் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்த எலும்புக் கூடு கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (க-9)

# மடகஸ்காரில் குவியும் நிவாரணம் தொடர்ந்தும் அனுப்ப முடிவாம்

(இலண்டன்)

இந்து சமுத்திரத்தில் தென் ஆபிரிக்காவிற்கு கிழக்கே அமைந்திருக்கும் மடகஸ்கார் தீவில் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வான் மார்க்கமாக வழங்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மடகஸ்காரின் கிழக்கு நகரான மானாறோவில் அகப்பட்டுள்ள 30 ஆயிரம் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 25 தொன் உணவுப் பொருட்களை உலங்குவானூர்தி மூலம் அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதி மக்களுக்கென 375 தொன் உணவுப் பொருட்களை வெகு விரைவில் அனுப்பி வைக்கப் போவதாகவும் உலக உணவுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை,

மடகஸ்கார் பகுதியை அடுத்தடுத்து தாக்கிய இரு சூறாவளிகளாலும் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளியேற முடியாமல் அகப்பட்டிருக்கிறார்கள்.

130 பேர் அநியாயமாச மரணித்திருக்கிறார்கள். 500 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்திருக்கிறார்கள் என மடகஸ்கார் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. ]க-9]

## அதிவேக ரயில்மீது பாறைகள் வீழ்ந்து 3 பேர் பலி! 10பேர் படுகாயம்

இந்தியாவின் குரில்லா என்னும் இடத்தில் இருந்து மங்களூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிவேக ரயில் தடம் புரண்டதில் மூவர் பலியாகினர்.

இதில் பயணம் செய்த பத்துப்பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட இவர்களில் 3பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமான வகையில் இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரயில் வந்துகொண்டிருந்த வேளையில் மேடான பகுதிகளில் இருந்து பாறைகள் உருண்டு ரயில்மேல் வீழ்ந்ததனாலேயே மேற்படி விபத்து நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (க-9)

## சர்வதேச றோட்டரி அமைப்பில் தெரிவான முதல் இந்தியத் தமிழர்

(நியூயோர்க்)

சர்வதேசறோட்டரி அமைப்பின் ஒன்பது இயக்குநர்களில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இவர் பதவி ஏற்றுள்ளமை இங்கு குறிப்படத் தக்கது.

இந்தியாவின் உதகமண்டலசர்வதேச பள்ளியில் இவர் முக்கிய பதவிவகித்து வருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

சர்வதேசறோட்டரிஅமைப்பில் தமிழ் நாட்டைசேர்ந்தவர் முதல் தடவையாக முக்கிய பதவிவகிப்பது ஆசியாவிற்குக் கிடைத்த பெருமை என வர்ணிக்கப்படுகிறது. (க-து)

### ஏப்ரல் 4 ஆம் திகதி

# ஐக்கிய நாடுகள் சபை முன்பாக ஈழத் தமிழரின் அமைதி ஊர்வலம்

(இலண்டன்)

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 4 ஆம் திகதி ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் அவையை நோக்கி அமைதி ஊர்வலம் ஒன்றினை நடாத்தத் திட்டமிட்டு வருகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு இயக்கம் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக தெரிய வருகிறது.

வழமையாக கடந்த சில ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலங்கள் போலல்லாது இவ் அமைதி ஊர்வலம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கும் என நம்பப்படுகிறது,

இவ்வாறு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஒரு குடையின்கீழ் ஒன்றுபட்டு நடாத்துகின்ற அமைதி ஊர்வலமானது இலங்கையில் ஈழத்தமிழர் மத்தியில் புதிய தென்பையூட்டும் என நம்பப்படுவதாக அரசியல் நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-9)

## செய்திக் குவியல்

★ தனது அங்கீகாரப் பட்டியலிலிருந்து அமெரிக்கா, இந்தியாவின் 51 ஆராய்ச்சிக் கழகங்களை நீக்கியுள்ளது.

★ பாகிஸ்தானில் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

★ கனடாவில் உள்ளூர் தொலைபேசி சேவைக்கு கட்டணம் அறவிடுவதில்லை.

★ இந்தோனேசியா பொலுக்கான் தீவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ பீஹார் முதல்வராக அண்மையில் நியமிக்கப்பட்ட நிதிஸ்குமார் இறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாதென்ற காரணத்தால் தாமாகவே பதவி விலகிக் கொண்டார்.

★ அவுஸ்ரேலியாவிற்கு வடகிழக்கே அமைந்துள்ள 'அவுஸ்ரேலியன் தடுப்புபார்' உலகில் புகழ்பெற்ற முருகைப் பாராகக் குறிப்பிடப்படுகிறது. (க-து)

## புதியதலைவர் நியமனம்

(புதுடில்லி)

ஆர். எஸ். எஸ் இயக்கத்தின் புதிய தலைவராக கே. சி. சுதர்ஸன் நியமிக்கப் பட்டுள்ளார்:

இதுவரைகாலம் தலைவர் பதவிவகித்து வந்த ராஜேந்திரசிங் உடல்நலக் குறைவு காரணமாக பதவி விலகியதைத் தொடர்ந்து புதிய தலைவர் நியமனம் இடம் பெற்றுள்ளது. (க-9)

## மொறிஷீயஸ் செல்லும் பிரதமர்வாஜ்பாய் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்வார்

(புதுடில்லி)

இந்திய பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய் வெள்ளிக் கிழமை மொறிஷீயஸ்பயணமானார்.

மூன்று நாள்விஜயம்மேற்கொண்டு மொறிஷீயஸ் செல்லும்பிரதமர் மொறிஷீயஸ்அதிகாரிகளுடன் இந்தியா மொறிஷியஸ் உறவுகளை மேம்படுவதற்கான நடவடிக்கைகள் குறித்துவிரிவான பேச்சுவார்த்தைகள் நடாத்தவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது வர்த்தகம், கடலியல், தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் ஒன்று கைச் சாத்திடப்'டும் என்றும தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் மொறிஷீயஸ் விஜயத்தை அடுத்து இந்திய எண்ணெய்கழகம் அந்நாட்டில் இயங்குவதற்கும், தூரதர்சன் நிகழ்ச்சிகள் அந்நாட்டில் நடைபெறுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதேவேளையில் மொறிஷீயஸின் சுதந்திர நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் இந்திய பிரதமருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க-து)

## நல்லுறவுக்கு முயற்சி

[தெஹ்ரான்]

கடந்த காலத்தில் நிலவிவந்த கசப்புணர்வுகளையும், சந்தேகங்களையும் புறந்தள்ளிவிட்டு சுமுகமான புதிய பரஸ்பர உறவை கட்டியெழுப்ப ஈரானும், ஜேர்மனியும் விருப்பம் தெரிவித்துள்ளன. [க-9]

## மேஹாலயாவில் நிலநடுக்கம்

[புதுடில்லி]

வடஇந்தியாவின் மேஹாலயாப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

3-8செக்கன் என்ற அளவில் பதியப்பட்ட இந்த நிலநடுக்கத்தினால் பாரியசேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (க)

# பாடசாலைகள் மட்டத்தில் பேதம் காட்டப்படுதல் கூடாது

## நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிய - பெரிய பாடசாலைகள் என்ற பேதம் இருக்கக் கூடாது. அனைத்துப் பாடசாலைகளும் ஒரே பாட விதானத்தையே கற்பிக்கின்றன.

இவ்வாறு இளைய தம்பி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றிய நல்லூர் பிரதேச செயலர் வேல்முருகோன் பிள்ளை தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இளையதம்பி வித்தியாலய மாணவர்களின் இடநெருக்கடியை விரைவில் போக்க கல்வித் திணைக்களமும் செயலகமும் இணைந்து செயற்படும் என்று உறுதியளித்ததுடன் ஆசிரியர், அதிபர் சமூகம் காட்டும் ஆர்வத்தை நாம் பெரிதும் பாராட்டுகிறேன் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய உதவிக் கல்விப் பணிப்பாளர் கமலாம்பிகை சுப்பிரமணியம்; அதிபரின் ஆளுமையைப் பெரிதும் பாராட்டியதோடு, ஆசிரியர்களின் அயரா உழைப்பையும், மாணவச் செல்வங்களின் ஆற்றல் மேம்பாட்டையும் வியந்துரைத்தார்.

மேலும் பாடசாலைகள் அனைத்தினதும் தேவைகள் ஒன்றே என்றும் அத்தேவைகளைக் கல்வித் திணைக்களம் இயலுமானவரை உதவுவதற்கு பாடசாலைச் சமூகத்தின் பெரும்பங்கு இருக்கவேண்டுமெனவும் வலியுறுத்தி, பிரதேச செயலரின் உறுதிமொழி செயல்வடிவம் பெறும் என்ற நம்பிக்கை தனக்கு உண்டு என்றும் கூறி தமதுரையை நிறைவு செய்தார்.

நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் சிறப்பு விருந்தினர் ஆகியோர் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை வழங்கினார்கள். (க-1)

## லீக்ஸ் அமோக விளைச்சல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் சர்வதேச நிறுவனமான கெயரின் ஆதரவுடன் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட லீக்ஸ் பயிர், அமோக விளைச்சலைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வாத காலநிலை நிலவிய போதும் இப்பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றி அளித்தமை பற்றி நெடுந்தீவு மக்கள் மத்தியில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது. (க-82)

பேச்சுவார்த்தை தோல்வியுற்றால்

# போரைத் தொடர்வதைத் தவிர எனக்கு மாற்று வழி கிடையாது

## -ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு விரும்பிய போதிலும், விடுதலைப்புலிகள் அதற்கு இணக்கம் தெரிவிக்காவிட்டால் யுத்தத்தை தொடரப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிக்கும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

இதனடிப்படையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துநிரந்தர சமாதானத்தை உருவாக்கும் நடவடிக்கைகனள மேற் கொண்டு வருகிறேன்.

ஆனாலும், எனது நிலைப்பாட்டிற்கு விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பு நல்காவிடில் போரைத் தொடர்வதனைத் தவிர எனக்கு வேறுவழி கிடையாது.

இருந்தபோதிலும், அரசின் நோக்கம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முன் முயற்சிகளை முழுமூச்சுடன் மேற் கொள்வதே எனவும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக நோர்வே தீவிர ஈடுபாடு காட்டி வருவதும் அதன் தொடர்பாக அவ் அரசாங்கத்தின் அமைச்சர் மட்ட பிரதிநிதிகள் இலங்கை வந்து பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்திச் சென்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தலைமையிலான ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்களுக்கும் இடையில் அண்மையில் அரசிலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை இடம்பெற்றதும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பானஒரு முன்னோடி நடவடிக்கை யொன்றே அரசியல் நோக்குநர்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

## நெடுந்தீவில் வீதிதிருத்தம் இல்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தின் பிரதான வீதி 20 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாததனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் பேருந்தைச் செலுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும், இவ்வீதியூடாக பேருந்தைச் செலுத்துவதனால் பேருந்து அடிக்கடி பழுதடைவதாகவும் பொதுமக்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுன்றது. (க-82)

# மட்டக்களப்பில்38இலட்சம் ரூபா செலவில் நிரந்தர கட்டடம் அமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலைக்கு ரூபா 38 இலட்சம் செலவில் நிரந்தர கட்டடம் ஒன்று அமைக்கப்படுகின்றது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் சமூக சேவைகள் அமைச்சிற்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே இக்கட்டடம் அமைக்கப்படுகிறது.

முதல் கட்டமாக சென்ற வருடம் 6 இலட்சம் ரூபாவுடன் இக்கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் பத்துலட்சம் ரூபாவும் அடுத்த வருடம் எஞ்சிய முழுத்தொகையையும் வழங்கப்படுமெனவும் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (க-60)

## வெங்காயச் செய்கை இம்முறை பாதிப்பு விவசாயிகள் மத்தியில் கவலை

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் பெரும்போக வெங்காயம் அறுவடையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளைப் போல் இம்முறையும் கூடுதல் விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்த போதிலும் மிகக் குறைவான அளவிலான விளைச்சலையே பெற்றுள்ளனர்.

வெங்காயத்தின் விளைச்சல் காலத்தில் பெய்த மழை மற்றும் கடும் பனித் தாக்கங்களின் விளைவால் வெங்காயம் சீரான விளைச்சலைக் கொடுக்காது குளிக்காய்களாக மாறியதனால் பெருமளவு வெங்காயத்தினை அறுவடை செய்தும் பாவனைக்கு உகந்ததாக இல்லாததால் தோட்டங்களிலே யே இவற்றை விவசாயிகள் கைவிட்டுள்ளனர். (க-14)

## பண்ணிசை போட்டி விண்ணப்பம்

(இணுவில்)

இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகத்தால் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக, நடாத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், மேற்படி, செயலாளருடன். தொடர்பு கொள்ளுமாறு. தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-48)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(அச்சுவேலி)

யாழ்.மாவட்டத்தில் கைத்தொழில் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக மாவட்டக் கைத்தொழில் ஒருங்கிணைப்புக் குழு இம்மாத நடுப்பகுதியில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் கூடபெறவுள்ளது. (க-14)

## நெடுந்தீவில் வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகளின் விபரம்

[நெடுந்தீவு]

நெடுந்தீவு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப் பந்தாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்படி போட்டியில் 15 வயதுப் பிரிவில் யாழ். நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் முதலாம் இடத்தையும், யாழ். நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

17 வயதுப் பிரிவில் றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயம் முதலாம் இடத்தையும், சைவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

19 வயதுப் பிரிவில் நெடுந்தீவு மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயம்இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

இங்கு முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகள் வலய மட்டத்தில்விளையாடுவதற்குத் தகுதி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. [க-82]

## புனருத்தாரண வேலைகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மேற்கு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான புனருத்தாரண வேலைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன.

ஆலய உட்பிரகார மண்டபம், கூரை என்பன புதிதாக அமைக்கப்படுகின்றன.

அதே வேளை சென்ற ஆண்டு ஆலய தேர்த் திருப்பணிச் சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## வாகரைக் கடலில் மீன்பிடித்த 4 மீனவர்கள் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு வாகரைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 4 மீனவர்கள் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

எம்,ஏ. நஜிம், ஏ.எல். நஈப் ஏ. குத்தூஸ், எம். செய்யதுகனி ஆகிய மீனவர்களே கடத்தப்பட்டவர்களாவர்.

இவர்களுடன் மீன் பிடித்துக் கொண்டிருந்த 16 மீனவர்களில் ஏனைய 12 மீனவர்களும் வள்ளம் ஒன்றில் தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கடத்தப்பட்ட வள்ளம் மற்றும் உபகரணங்களின் பெறும்தி 30 இலட்சம் ரூபா எனப் பொலிஸாருக்கு முறையிடப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்கள்ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-60-108)

## அடையாள அட்டை ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனந்தாவீதி, மானிப்பாயைச் சேர்ந்த சிவபெருமான் ஜெயரூபன். என் பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
### றஞ்சினிதேவி வசந்தரூபன்

தோற்றம் 17 - 12- 64 மறைவு 17- 12- 99

(87-ம் நாள்)

### சிவசம்பு ஆனந்தநடராசா

தோற்றம் 23- 06- 30 மறைவு 08- 01- 2000

(65-ம் நாள்)

அன்னாரது ஈமக் கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பலவழிகளில் உதவி புரிந்தவர்கட்கும், தொலைபேசி மூலம், தபால் மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னார்களது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

33, றக்காறோட், யாழ்ப்பாணம்.

திருமதி. ஆனந்தநடராசாவும் குடும்பத்தினரும்

[224]

யாழ். மாவட்டத்தில்

# இளைஞர், யுவதிகள் செயல்திட்டங்கள் குறித்து

# பல்வேறு செயல் திட்டங்கள் முன்வைப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் பல குறைபாடுகள் இருந்தாலும் கூட அவை பெரிதாக இருக்கவில்லை. நாம் இங்கு எத்தனையோ செயல் திட்டங்களைச் செய்துள்ளோம். அவற்றின் மூலம் மக்களின் சுமைகள் சிறிது சிறிதாகக் குறைந்து வருகின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர் யுவதிகளின் மேம்பாடு தொடர்பான பணிகளைச் செய்து வருகின்றன.

## .யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

இவ்வாறு யாழ். மாவட்ட அரசங்கதிரு. அதிபர் க. சண்முகநாதன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடாத்திய இளைஞர் கொள்கைகள் தயாரிப்பதற்கான வேலைத்திட்டம் 2000 ஐ ஆரம்பித்து வைத்து தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபர் திரு.க. சண்முகநாதன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது.

புத்தாயிரம் ஆண்டில் இளைஞர்களுக்கான கொள்கைத் திட்டங்கள் வகுப்பதற்காக பொது நலவாய அமைச்சர்கள் மட்டத்தில் ஆராயப்பட்டு அதன் பிரகாரம் நாட்டிலுள்ள இளைஞர்கள் புத்திக் கூர்மையுள்ளவர்கள் துறைசார் நிபுணர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் இருந்து கருத்துத் திரட்டும் பொருட்டு இவ் வேலைத் திட்டம் நடாத்தப் படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஏனைய மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களை விட யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்து பலதிட்டங்கள் அமுல் செய்யப்பட உதவியுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

இவ்வேலைத்திட்டத்தின் போது மேலதிக அரச அதிபர் திருமதி. ப. திலகநாயகம் போல், பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.ஆ.சிவசாமி கரவெட்டிப் பிரதேசச் செயலர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் ஆகியோர் உட்பட புத்திக் கூர்மையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதேச மட்டகழங்கள் உட்பட சுமார் 120 பேர் பங்குபற்றியிருந்தனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் திரு. ரி. சிவதட்சணாமூர்த்தி வேலைத் திட்டம் பற்றிய விளக்கவுரையை வழங்கினார்.

இவ்வேலைத் திட்டத்தில் கல்வி, தொழில் பயிற்சி, திறமை வளர்ச்சி, தொழில்வாய்ப்பு, சமுதாயச் சிக்கல் தலைமைத்துவம், இலக்கியம் கலை சங்கீதம், விளையாட்டு, பொழுதுபோக்கு, இளம்குற்றச் செயல், உளவியலும் இளைஞரும், மீன்பிடி, விவசாயம் சட்டமும், இளைஞரும், போன்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் ஆறு குழுக்கள் கொள்கைதயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [க-77]

# பாடசாலை வைபவங்களுக்கு மாத்திரம் 'பான்ட்' வாத்தியம் பாவிக்கலாம்

## கல்வி அமைச்சு உத்தரவு

(மட்டக்களப்பு)

பாடசாலை பான்ட் வாத்தியக் கருவிகள் பாடசாலை வைபவங்களுக்கு மட்டும் பயன் படுத்தவேண்டுமென கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாவட்ட வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதன் படி பாடசாலை பான்ட் வாத்தியம் பாடசாலை வைபவம் தவிர்ந்த வேறு வைபவங்களுக்கு பயன்படுத்துவதற்கு முற்றாகத் தடை செய்யப்படுவதுடன் இவ் உத்தரவு கண்டிப்பாக அமுல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)

# மருத்துவ வசதி பெறமுடியாது அல்லலுறும் வடமராட்சி கிழக்கு மக்கள்

[வடமராட்சி கிழக்கு]

மருத்துவ வசதி இன்மையால் மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்புப் பகுதி மக்கள் பெரும் இன்னலை அனுபவித்துவருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி வைத்தியசாலையில் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்த போதிலும் தற்போதைய நிலையில் மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையையடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்கும், ஆம்பனை கிராமிய வைத்தியசாலைக்கும் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவடமராட்சி கிழக்கு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க)


## G. S. B. COMMUNICATION CENTRE

தொலைபேசி பாவனையாளர்களின் வசதி கருதி மேலதிக தொலைபேசி இணைப்பு, தொலை நகல் (FAX) வசதி என்பன செய்யப் பட்டுள்ளது என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

(24 HOURS - SERVICE)

குறைந்த கட்டணம் நிறைந்த சேவை.

உள்நாடு (LOCAL)
021 - 3220
021 - 3430

வெளிநாடு (I.D.D)
0094 - 21 - 3220
0094 - 21 - 3430

தொலை நகல் [FAX]
021 - 3430

444/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பாப்பையா கடைச் சந்தி) [சி-122]


## விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை கடல் கடந்த சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியற் சேவை, இலங்கை பொலிஸ் சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத் திறமைகாண் தடை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை என்பனவற்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 29ம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும் விண்ணப்பங்களை இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான முழு விபரமும் பெப்ரவரி மாதம் 18ந் திகதிய வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

அரசாங்க நூலகர் சேவை தரம் மூன்று, தரம் இரண்டு ஆகியவற்றிலுள்ள அலுவலர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 6ந் திகதி கொழுமபில் நடைபெறுமென்று பரீட்சைஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 16ந் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது பற்றிய முழு விபரங்களையும் பெப்ரவரி மாதம் 18ந் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம்.

★ ★ ★

இலங்கைப் பரீட்சைத் திணைக்கள கணனித் தொகுதி இயக்குனர் தரம் இரண்டு பதவிக்கு பின்வரும் தகமையுடைய ஆண் பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகமைகள் – க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் சிங்களம் அல்லது தமிழ்மொழி, விஞ்ஞானம், ஆங்கில மொழி உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய இரு பாடங்களுட்பட 4 பாடங்களில் க. பொ. த. உயர் தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதங்களுக்குக் குறையாத காலம் கணனி பற்றிய பாடநெறியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் இப் பாடநெறியில் தற்போது பாவனையிலுள்ள சொற்கள் அமைத்தல், விரி

(8ஆம் பக்கம் பார்க்க)


## அன்பு வாசகர்களே!

இதோ !

உங்கள் துன்பத்தில் வலம்புரியும் இன்றே இணைந்து கொள்கிறது

உங்கள் உறவுகளின் இழப்பை வெளிப்படுத்தும்

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- வீட்டுக்கிருத்திய அழைப்புகள்
- நினைவஞ்சலிகள்

யாவற்றையும் மிகமிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வலம்புரி காத்திருக்கிறது.

மு: குறிப்பு; வலம்புரியில் மரண அறிவித்தல் பிரசுரிக்கப்படும்போது அதன் 31ம் நாள் நினைவஞ்சலிக்கு விசேட சலுகை வழங்கப்படும்.


## அலங்கார திருவிழா

(நீர்வேலி)

நீர்வேலி காளியம்மன் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 8ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் சமயப் பிரசங்கங்கள் தினமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அகிலஇலங்கை அமுதசுரபி கலாமன்றத்தின் பேச்சாளர்களால் நடாத்தப்படும் இச் சமயப் பேச்சுக்களையடுத்து சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

பங்குனிப் பூரணைதினமான 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் அலங்கார உற்சவம் நிறைவேறும்.

## வருடாந்த மகோற்சவம்

(இணுவில்)

இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில் மகோற்சவம் கடந்த 9ஆம் திகதி வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி19ஆம் திகதி ஞாயிறு தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

தினமும் மாலை 4.30மணி முதல் 5.30மணிவரை செஞ்சொற் கொண்டல் ஆறு. திருமுருகனின் சிறப்பு சொற்பொழிவுஇடம்பெறும் (க-49)

## பரிசளிப்பு வைபவம்

அரசடி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலை பேச்சுத் திறன் காணும் வைபவமும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 8 00 மணியளவில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாலர் பாடசாலைப் பொறுப்பாசிரியர் திருமதி கே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை பிரதி அதிபர் சு. தியாகலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினராக இ. தவகோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## அருள் புரிவாய் வைத்தீஸ்வரனே!

ஆலாலம் உண்டு அமரரைக் காத்துத்
திரு நீல கண்டனாய் ஆன இறைவனே!
காலால் காலனை உதைத்தே அன்பன்
மார்க்கண் டேயனைக் காத்த சிவனே!

வாலாம்பிகையாள் சமேதராய் வண்ணையில்
கோயில் கொண்ட வைத்தீஸ்வரனே!
மாலோனும் பிரமனும் தேடியும் அடிமுடி
காணாச் சோதியே! அருள் புரிவாயே!

- நாயன்மார் கட்டு ப,மகேந்திரதாசன்

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகின்றது.)

## வலம்புரியே வாழ்ந்திடுவாய்

தேன் பாடும் ஈழமதில்
திசையெங்கும் செய்திதனை
சுடச்சுடவே தந்தெம்மை
வியக்க வைக்கும் நாளிதழே
மற்றவர்க்கும் ஈடிணையாய்
மயங்கவைக்கும் தெம்மாங்கே
உன் உடல் எம்முடன்
எம் முடல் உன்னுடன்
சிதறாமல் நாளும்
சுவையாக எம்முடன்
நிறைவாகத் தந்திடுவாய்
வளமான வாழ்வு பெற
வலம்புரியே வாழ்ந்திடுவாய்
நிறைவான கரம்தவழ
நினைவுடனே வாழ்ந்திடுவாய்.

வ. சசிகுமார்
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

மதிநுட்பம் நூலோடு
உடையார்க்கு அதிநுட்பம்
யா உள முன்நிற் பவை.

- குறள்

# வலம்புரி

## நூற்றிரண்டு ....

மார்ச்சு எட்டு மகளிர் சகல துறைகளிலும் சுதந்திரத்தை எட்டுவதற்கு ஏகோபித்த குரல்கொடுக்கும் நாள். குரல்கள் அன்றுமட்டும் ஒலித்தால் அவலக்குரல்கள் மாறப் போவதில்லை. ஆனாலும் நம் நாட்டின் தலைமைப் பிரஜை ஒரு பெண் என்ற பெருமை பெண் குலத்துக்கு உண்டு. அந்தப் பெண்மை மகளிர் மத்தியில் குரல் கொடுக்கின்ற போது தடைகளைச் சாடும் வகையில் வீறாப்புள்ள உறுதி மொழியொன்றைக் கூறியுள்ளார்.

இங்கே முக்கியமானது ஆளும் அரசியல் தலைமைத்துவத்தின் ஸ்திரமும் குறிக்கோள் குலையாப் பற்றுமே யாகும். திடசங்கற்பம் இலகுவில் எல்லோர் உள்ளத்திலும் புகுந்து விடாது வேண்டியதைச் செய்யவும்மாட்டாது. அதுவும் அரசியல் சகதியில் அது முளைகொள்வதென்பது அபூர்வமே.

எது எப்படியிருந்தாலும் மிலேனியம் பரிசாக நாட்டுமக்கள் சமாதானத்தைப் பெற வழி பிறந்து விட்டது போலிருக்கிறது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்த போது ஜே. ஆர் செய்யத் தவறிய தொன்றை இல்லாத போதிலும் செய்வேன் என்று கூறுவது பெண்மையின் திண்மைக்கு அணிகலனே. சொல்லும் செயலும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள். அவற்றின் வலு யதார்த்தத்தைக் காணும் போது தான் பரிணமிக்கும்.

காலங்கள் பல கண்ணியப்பாதையை விட்டு ஓடியிருக்கிறது. அதனால் அடைந்த விபத்துக்கள் ஏராளம். அதனால் அழிவும் அலறலும் எம்மைப் புண்படுத்தியுள்ளன. அபலை வாழ்வு மலிந்த மண்ணில் அபலைவாழ்வின் அடி நாதத்தை உய்த்துணர்ந்த அம்மையார் அறை கூவுவது சாலப் பொருத்தமே. கண்ணீர் கன்னங்களை நனைத்தது காயாத நிலையில் வேண்டுவது பூரண சுதந்திரமொன்றே அதனால் பெறப்போவது சமாதான சகவாழ்வே.

கண்ணியம் தழைக்கும் போதுகண்ணீர்மறையும். மண்ணிலே நல்ல வண்ணம் வாழ வழி பிறக்கும். எண்ணிய அனைத்தும் நாடு பெற உயர்வுண்டாகும்.

- அன்புடன் ஆசிரியர்

# தமிழர் கல்வி வரலாற்றில் தனியான இடம்பெற்ற

# செயல்வீரன் அமரர் சு. இராசரத்தினம்

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தினரின் பவளவிழா இரண்டாவது நாளான இன்று இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ-ர்)

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக சைவ மக்களின் நினைவில் வாழும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் காலத்தின் தேவை கருதி சேர். பொன். இராமநாதன் அவர்களால் 1923 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சைவ மக்களின் கல்விச் சேவையை நிறைவேற்ற ஒரு கூட்டான அமைப்பு அவசியம் என்பதை நாவலர் முன்னரே உணர்த்தியிருந்தார்.

கல்வியை வழங்குவதற்குப் பலர் இணைந்து பணி செய்ய வென சைவவித்தியா விருத்திச் சங்கம் தோன்றியது. அச்சங்கத்தின் பணிகளிலே பல ஆண்டுகளாகத் தன்னை இணைத்து அயராமல் செயற்பட்ட அமரர் சு. இராசரத்தினம் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நீங்காமல் என்றும் வாழ்பவர். அவருடைய கல்வி சார் பணிகளை அவர்காலத்து மக்கள் நன்கு அறிவர். எதிர்கால இளந்தலைமுறையினர் அப்பணியை நன்கறிந்து நாமும் அதைத் தொடர வேண்டியவர்கள். இலங்கையின் கல்வி வரலாற்றில் 1930 தொடக்கம் 1970 வரையான காலப்பகுதியில் சு. இராசரத்தினம் தன்னை இணைத்துக் கொண்டவர்.

இவர் தாயார் சிவகாமிப் பிள்ளை கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையார் சுப்பிரமணியம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர்களின் செல்வ மகனான இராசரத்தினம் 1884 ஆம் ஆண்டு ஆடிமாதம் 4 ஆம் நாள் கோப்பாயில் பிறந்தவர். இளமைக் காலக் கல்வியை மாமனிடமும், நற்றமிழ்ஆசிரியர்களிடமும்பெற்று உயர்கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் பெற்றார்.

கல்லூரியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் விளங்கியவர். பின்னர் கல்கத்தாவில் பட்டப் படிப்பையும் முடித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக வெளியேறியவர். திரு. சு. இராசரத்தினம் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தில் 1928 ஆம் ஆண்டு தன்னைஇணைத்துக்கொள்ள முன்னரேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சைவ வளர்ச்சிக்கும் பணியாற்றும் பல நிறுவனங்களிலும் அங்கத்தவராகி பதவி நிலைகளை ஏற்றும் பணி செய்தவர். இவற்றில் சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபை, யாழ்ப்பாண சங்கம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

### சங்க உறுப்பினர்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் திரு. சு. இராசரத்தினம் உறுப்பினராக இணைந்த போதும் 1928 ஆம் ஆண்டு தொடக்கம் முழுநேர ஊழியனாகித் தன் கல்விப் பணியைத் தொடர்ந்தார் 1936 ஆம் ஆண்டு வரை முகாமையாளராகவும் 1970 வரை நிர்வாக காரியதரிசியாகவும் அவர் பணி செய்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வரலாற்றில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் திரு. சு. இராசரத்தினத்தின் பெயரும் நிலைத்துள்ளது. நீண்ட காலம் சைவ மக்களின் கல்வியறிவூட்டல் பணிக்குத் தன் அயராத முயற்சியை நல்கிய அவருடைய சேவை மனப்பாங்கு வழிபாட்டிற்குரியது. நாவலருக்குப் பின் நாவலர் பணியைதொடர்ந்தசு. இராசரத்தினம் என்றும் நினைவில் சிலையாக நிறுத்தப்பட வேண்டியவர்.

பிறமதச் செல்வாக்கும் ஆங்கிலக் கல்வியும் சைவ மக்களின் வாழ்க்கைச் செந்நெறியை மாற்ற முற்பட்ட வேளையில் சைவவித்தியா விருத்திச் சங்கம் அதனைத் தடுக்கத்தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டது பல பாடசாலைகளை நிறுவித் தமிழ் மக்களுக்குக் கல்வி வழங்க முற்பட்டது. 1935 ஆம் ஆண்டு கல்விப்பணியின் பேறாகச் சங்கம், ஆசிரிய கலாசாலை அனாதை விடுதி இருமொழிப்பாடசாலை (ஆங்கிலம், தமிழ்) உயர்தர பாடசாலை, கனிஷ்ட பாடசாலை, ஏனைய பாடசாலைகள் என பல்வேறு நிலையான அமைப்பை நிர்வகித்து வந்தது.

இவற்றின் நிர்வாகப் பொறுப்பை சு. இராசரத்தினம் ஏற்று நடத்தி வந்தார். நிர்வாக நிலையில் ஏற்பட்ட தடைகளையெல்லாம்தாண்டி சிக்கல்களையெல்லாம் விடுவித்து அவர் அயராது உழைத்தார். தனக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் எல்லாம் பொருட்படுத்தாது செயல் வீரனாக வாழ்ந்தார். சிறந்த பேச்சாற்றல் படைத்த அவருடைய முகாமைத்துவத்தை விரும்பாத சிலர் இருந்தனர். அவரைமுகாமையாளர் பதவியிலிருந்து விலக்குவதற்கும் வழி செய்தனர் ஆனால் அவரோ சளைக்காது தனது பணியைத் தொடர்ந்தார்.

### கல்வியே கருந்தனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வியையே கருத்திற் கொண்டு வாழ்ந்த சு. இராசரத்தினம் கல்வி வளர்ச்சியிலும் பொருளாதார நிலையிலும் பின் தங்கியிருந்த தீவுப்பகுதிகளை முன்னேற்றுவதில் மிகுந்தஅக்கறை காட்டினார். ஏறக்குறைய 20 பாடசாலைகளைத் தீவுப்பகுதிகளில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் அமைப்பதற்கு இவரே உறுதுணையாக நின்றார்.

இதே போன்று தென்மராட்சியிலும் பல பாடசாலைகளை நிறுவி கல்விச் சேவையை வழங்கப் பணியாற்றியுள்ளார். வடமராட்சியின்தனித்தன்மைக்கு ஏற்ற வகையில் அங்கும் கல்விச் சேவை பரவலாக்கம் பெற்றது.

வலிகாமம் பரந்த நிலப் பரப்புடையதாக இருந்தமையும் அதன் மண் வளமும் கிறிஸ்தவ சமயத்தின் செயற்பாடுகளும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகளை அங்கு காலூன்றச் செய்தன.

பல பாடசாலைகள் இப்பகுதியில் நிறுவப்பட்டுச்சைவ மக்களின் கல்வி முன்னேற்றம் பேணப்பட்டது. சைவமகளிர் கல்வியையும் முன்னேற்ற முயற்சி எடுக்கப்பட்டது. ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு அடைக்கலம் தருவதற்காக அநாதை விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக விளங்கிய அ. செல்லையா இப்பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தார். வீட்டில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட விடுதி பின்னர் ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி இரு பகுதியாக விரிவாக்கம் பெற்றது. இப்பிள்ளைகளின் பராமரிப்பையும் கல்விப் பயிற்சியையும் திரு. சு. இராசரத்தினமே நீண்ட காலமாக ஏற்றிருந்தார். இப்பணியிலே பல கஷ்டங்களைச் சங்கமும் இவருடன் எதிர் நோக்க வேண்டியிருந்தது. குறிப்பிட்ட வயதெல்லைவரையுமே அரச உதவி பெற முடிந்தது.

### ஆதரவற்றவர்களுக்கு புகலிடம்

புகலிடம் தேடி வந்த சிறார்களையும் வெளியே புறம் தள்ளிவிடாமல் பராமரிக்க அவர் தவறவில்லை. அவர்களின் தொழிற்பயிற்சியையும் மறக்கவில்லை. நெசவு, விவசாயம் என்பவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. விடுதியை விட்டு வெளியேறும் போது அவர்கள் கல்வியறிவையும் தொழிற் பயிற்சியையும் பெற்று வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடையவர்களாக தலைநிமிர்ந்து சென்றார்கள்.

பெற்றோரின் இழப்பு, வறுமையின் கொடுமை என்பவற்றினால் வாடிய அவர்களின் உள்ளத்தை உற்சாகப் படுத்தி கல்வியிலே ஊக்குவித்து செயல் வீரராக்கி கடமையிலே பற்று ஏற்படுத்தி மனித விழுமியங்களைவெளிப் படுத்தும் சான்றோராகச் சமூகத்தில் சென்று இணைய சு. இராசரத்தினம் தன் முழு முயற்சிகளையும் தந்தார்.

பெண்களுக்கென சைவாசிரிய கலாசாலை அமைத்து சைவப் பண்பாட்டை பரப்பும் செம்மையான பணியைப் பெண்களிடம் கையளிக்க வேண்டும் என்ற நோக்கில் அக்காலத்தில் ஆசிரிய கலாசாலைகள் நிறுவப்பட்டன. திரு. சு. இராசரத்தினமும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஒரு சைவ மகளிர் கலாசாலை ஒன்றை அமைக்க முயற்சி எடுத்தார். ஆனால் அது நிறைவேறவில்லை. கல்வியை பெண்களுக்குச் சிறந்த முறையிலே வழங்கினால் சமூக அங்கத்தவர் யாவரும் செம்மையான நெறியிலே வாழ்க்கை நடத்த முடியும் என்று அவர் எண்ணினார். அவருடைய தீர்க்க தரிசனம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. எதிர்காலத் தலைமுறையினரை நெறிப்பட வாழ வைக்கவென் அவர் தொடங்கிய சேவை இன்று வரை தேவையாக உள்ளது. சைவக் கல்வி என ஒரு தனித்துவமான கல்விப் பயிற்சி தான் எமது முன்னோரை வழிப்படுத்தியது. அன்பு, தொண்டு என்ற இரு நிலையான செயற்பாடுகளைச் சிறு வயதிலேயே மேற்கொள்ள வேண்டும் என்ற உண்மையை எல்லோருக்கும் உணர்த்தப் பணி செய்தவர் சு. இராசரத்தினம் அவருடைய செம்மையான பணிக்கு அவருடைய வாழ்வுச் சூழலும் கல்விப் பயிற்சியுமே துணை நின்றுள்ளன.

எதிர்ப்புக்கள் ஏற்பட்ட போதும் எல்லோரும் பயன் பெறும் ஒரு நல்ல பணியை என்றும் தொடரவேண்டும் என வாழ்ந்து காட்டிய இப் பெரியார் தமிழர் கல்வி வரலாற்றில் என்றும்இடம் பெறுவார். சைவ வித்தியா விருத்திச் சங்கம் பவள விழாவில் அவரையும் அவர் கல்விச் சேவையையும் இன்றுவாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல முறையிலே அறிமுகம் செய்வது காலத்தின் தேவையாகும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
[வருகை ஆய்வாளர் மொழியாய்வு நிறுவனங்களின்
பல்கலைக் கழகம் - ஜப்பான்]

# திருநெல்வேலிசைவவித்தியா விருத்திச்சங்க இன்றைய இரண்டாம் நாள் நிகழ்வு

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க பவள விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வாக இந்து போர்ட் இராசரத்தினம் நினைவுக் கருத்தரங்கு இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகிறது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும் இக்கருத்தரங்கில், ''இலங்கையில் கி.பி. 1900-1960 வரையிலான கல்வி'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வ. ஆறுமுகம் கருத்துரை வழங்குவார்.

தொடர்ந்து, வரலாற்றுப் பின்னணி என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமாரும் கல்வி நிறுவனச் செயற்பாடுகள் என்ற தலைப்பில் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை ஆகியோர் கருத்துக்களை வழங்குவர்.

யாழ்ப்பாணத்தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம்'' எனும் பொருள் பற்றி தென்னிந்தியத் திருச்சபை ஆண்டகை பேராயர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் ''சைவ வித்தியா விருத்திச் சங்கமும் எதிர்காலக் கல்வியும்'' எனும் பொருளில் யப்பான் கச்சுயின் பல்கலைக்கழக மொழியாய்வு நிறுவனத்தைச் சேர்ந்த வருகை ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவார்.

கருத்துரைகளை அடுத்து பெற்றோர் ஒன்று கூடலும் இறுதி நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. விசாகரூபனின் நெறியாள்கையில் உருவான யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் வள்ளி திருமணம் இசை நாடகமும் இடம் பெறும். (க-9)

# மருந்திற்குத் தட்டுப்பாடு

[அச்சுவேலி]

கோப்பாய் அரசினர் மருத்துவ மனையில் முக்கியமான மருந்துகளிற்கு பெருந்தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிய வருகின்றது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். (க-57)

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

# தனது சொத்துக்களை மீளப் பெற்று நிர்வகிக்க முன்வர வேண்டும்

யாழ்ப்பாணம்

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள், பாடசாலைகள் ஆகியவை எங்குள்ளது என்று தேடிக் கண்டுபிடித்து அவற்றை மீண்டும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் பொறுப்பேற்று நிர்வகிக்க வேண்டும்.

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பவளவிழா வைபவம் நேற்று நடைபெற்ற போது இந்துப் போர்ட் இராசரத்தினத்தின் சிலையை திறந்து வைத்துப் பேசிய யாழ். அரச அதிபர் திரு. க. சண்முகநாதன்மேற் கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

சைவ வித்தியாவிருத்திச் சங்க வளவில் வைக்கப்பட்டுள்ள இந்துப் போர்ட் இராசரத்தினம் அவர்களின் சிலையை யாழ். அரச அதிபரும், சைவ வித்தியாவிருத்திச் சங்க இல்லத்தில் இருக்கும் சிறுமி ஒருவரும் திரைநீக்கம் செய்து வைத்தார்கள்.

இராசரத்தினம் அவர்கள் அமரத்துவம் அடைந்து 3 வருடங்களின் பின் அவரது சிலை திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தவர்கள், யாழ் பல்கலைக்கழக பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சணமுகதாஸ் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

### எச்சந்தர்...

எனத் தெரிவித்துள்ளார்,

தனது உரையில் கொழும்பில் அமைச்சர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து எதுவும் கூறாத ஜனாதிபதி நீண்டகாலமாக நீடித்துவரும் இனமோதலுக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணப்படவேண்டும் எனவும் அதற்குப் புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தப்படவேண்டும் எனவும் தனதுரையில் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ ச)

### பாரிய...

கொண்டவர்கள் நவீனரக ஆயுதங்களையும் பாரிய ஆயுதங்களையும் பயன்படுத்தியுள்ளதுடன் இவற்றை பொறளை சேர்ப்பன்றைன் அரச தொடர் மாடியில் ஒளித்து வைத்திருக்கவும் எவ்வாறு முடிந்தது என்பதைக் கண்டறிவதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல விக்கிரசிங்க தெரிவித்துள்ளனர், (வ,ச)

### மாடியை...

பிரிவில் புகலிடம் தருமாறு கேட்டு மறைந்து கொண்டனர்.

இவ்வாறு மாடிக்கட்டடப் 'சி' பிரிவில் குடியிருக்கும் இளைஞர் சபார் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்: இவர்கள் புகலிடம் தேடி வந்தபின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டு மாடிக் கட்டடம் அல்லோலகல்லோலப்பட்டது.

நாங்கள் பயப்பீதியினால் பூட்டிய அறைக்குள் முடங்கிக் கொண்டோம்.

இதன் பின் பொலிஸார் வந்து எம்மை விசாரித்து வெளியில் விட்டனர்.

### விண்ணப்பம்---

வுப்பத்திரம் தரவு முறையை இயக்கும் முறை ஆகியன அடங்கியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 24 - 03 - 2000 ஆகும். இது சம்பந்தமான முழு விபரங்களும் பெப்ரவரி 25ந் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது,


ஸ்ரீ செல்வா

யாழ். ஸ்ரான்லி வீதி,

காலை 10-30 பி.ப 2.30

அஜித்குமார் ஜோதிகா

நடித்த

''முகவரி''

வெட்டுப்படாத

நேரடி CD

(புதிய வெளியீடு)

(00115)


## புலமைப்பரீட்சை விண்ணப்பம் கோரல்

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள 5ந் தரமாணவர்களுக்கான புலமைப் பரீட்சைக்குரிய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

முடிவுத் திகதி இம்மாதம் 31ம்திகதி எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### வெளியே ..

நலன்களுக்குப் பொறுப்பான குழு நேற்றுக்கூடி இந்த முடிவை யெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் தாம் இந் நிலையங்களிலிருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளிலோ அல்லது வாடகை வீடுகளிலோ வசிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரியதற்கிணங்கவே இம் முடிவு எடுக்கப்பட்டது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் வன்னி மாவட்ட எம்.பி இராஜமனோகரி புலேந்திரன் யாழ் மாவட்ட எம்.பி. சிவதாசன், பிரிகேடியர் பியசோம இன்ஸ்பெக்டர் டி. பண்டார ஆகியோர் கொண்ட குழுவே மேற்படி குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிற்கு வெளியே சென்று வசிக்க அனுமதி வழங்கியுள்ளது.

### எத்தகைய...

திருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போது இத்தகைய தாக்குதல்கள் இடம் பெற்றால் அது பேச்சுவார்த்தையை குழப்பக்கூடியதாக இருக்கும். ஆனால் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காத இவ்வேளையில் நடைபெறும் எத்தகைய குண்டுத் தாக்குதலும் எதிர்காலப் பேச்சுவார்த்தையில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று மேலும் கூறினார்.

அரசு தற்போது பாராளுமன்ற கட்சிகளுடன் பேச்சு நடத்துகின்றது. இதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் சர்வதேச மத்தியஸ்தத்தோடு பேச்சு நடத்தப்படும் அதன் போது தான் மோதல் இல்லாத ஒரு சூழலை ஏற்படுத்த முடியும் என்று கூறினார்.

]வ-ச)

## மர்மப் பொருள் வெடித்து வாலிபன்மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தட்டா தெருவை அண்மித்த பகுதியில் நேற்றுக் காலை மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் மாணவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

நெல்லியடியைச் சேர்ந்த செல்வரசா நிரோஸ் (வயது 20) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தட்டாதெருவில் உள்ள தனது உறவினரின் வீட்டில் தங்கி நின்ற போதே இவ் விபரீதம் ஏற்பட்டது.

தற்போது இம் மாணவனின் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந)

### தற்கொலை--

னர்.

இதன் போது 3 ஆம் மாடிக் கட்டடத்தின் சி பிரிவு பலத்த சேதத்துக்குள்ளானது, இராணுவத்தினரின் தேடுதலின் போது சிதறிய உடல் துண்டங்களை படையினர் கைப்பற்றினர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:

பொறளை கார்ஷல் வீதிக்கும் பழைய கொட்டா வீதிக்கும் இடையில் உள்ள புதர்கள், செடிகள் வளர்ந்த இடத்தில் இனந்தெரியாத இளைஞர்களின் நடமாட்டம் தென்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அப் பகுதியைச் சுற்றிவளைத்த சமயம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தற்கொலைக் குண்டுதாரி எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒரு குண்டொன்றை வெடிக்க வைத்த போது அவ் வீதியால் சென்ற பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களே கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் தொகை 20 ஆகவும் காயமடைந்தவர் தொகை 66 ஆகவும் உயர்ந்துள்ளதுடன் 10 க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமாகியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் கொழும்பு சுதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலை இன்னமும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-ச)

### தொண்டர்.,-

துள்ளது,

இவர்களில் க. பொ. த. உயர்தரத்தில் எத்தனை பேர் சித்தியடைந்துள்ளார்கள் என்ற விபரங்கள் தெளிவுபடுத்தப்படாததன் காரணமாக, க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களுக்குமேல் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரம், விசேட தகைமைகள், தொண்டர் ஆசிரியர் நியமனம் யாரால் வழங்கப்பட்டது போன்ற தகவல்களை வ, கி. மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அந்தந்த கல்வி வலயங்களிடம் கோரியுள்ளார்.

இத்தகவல்கள் சேகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து ஐநூறு (1500) ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஏப்ரல் மாதம் 3ஆந் திகதியும், 17ஆந் திகதியும் நடைபெறும். இது பற்றிய செய்தி நேற்றைய வலம்புரியில் பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே. (ந)

## ராஜகிரிய குண்டுத்தாக்குதலில்

# கொல்லபட்ட 20 குடும்பங்களுக்கு உடன்10ஆயிரம்வழங்க அஷ்ரப்உத்தரவு

[கொழும்பு]

கொழும்பு ராஜகிரிய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட 20குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாவை மரணச்செலவிற்காக வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் புனரவாழ்வுஅதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளதாக அச் சபையின் தவைர் எம். எச். எம். சல்மான் தெரிவித்தார்.

இதுவரை கொல்லப்பட்ட 20 பேரினதும் காயமடைந்த 40 பேரினதும் விபரங்கள் தனக்குக் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர் இக்கொடுப்பனவுகள் இன்று வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதே வேளை கொல்லப்பட்ட ஒவ்வொரு அரச ஊழியரின் பேரிலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளதாகவும் கொல்லப்பட்ட ஏனையவர்கள் சார்பில் 50 ஆயிரம் ரூபாவையும் காயமடைந்த ஒருவருக்கு காயத்தைப் பொறுத்து ஒரு இலட்சம் ரூபாவரை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

]வ-ச)

## கஷ்ரப் பிரதேசத்தில்

# கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கத்திட்டம்

(கொழும்பு)

கஷ்ரப் பிரதேசங்களில் கடமையாற்றும், கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளையும் வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கும் கல்வியியலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போது மேற்படி விடயம் சம்பந்தமாக இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிணங்க கஷ்ரப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 1500 ரூபாவை விசேட கொடுப்பனவாக வழங்குவதுடன், கடன் வசதிகள், வாகனக்கடன், இவ்வாசிரியர்களின் பிள்ளைகளுக்கு பிரபல்யப் பாடசாலைகளில் இட ஒதுக்கீடு கஷ்ரப் பிரதேசப் பாடசாலைகளில்கடமையாற்றியமைக்கான சான்றிதழ் வழங்கல் குறிப்பிட்ட காலம் கஷ்ரப் பிரதேசப் பாடசாலையில் கடமையாற்றிய பின் வசதியான பாடசாலையில் சேவையாற்றும் வசதிகள் உட்பட மேலும் பல சலுகை வழங்கப்பட இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

# கொழும்பு வரும் பெண்கள் தங்குவதற்குபுதிய நிலையம்

(கொழும்பு)

பொது வைபவங்களின் நிமித்தம் கொழும்பு வரும் பெண்களின் நன்மைகருதியும் அவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டும் விசேட நிலையமொன்று அமைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இம்முறைமகளிர் தினவைபவங்களுக்கு கொழும்பு நகருக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தங்குமிடவசதியின்றி அவதிப்பட்டமை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து இவ்விசேட நிலையத்தை ஸ்தாபிக்கஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(வ-ச)

### கடற்றொழிலாளரைத்-.-

எடுக்க வேண்டும் இவ்வாறு யாழ். மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் மன்னார் மீனவர்கள் எவ்வாறு நெடுந்தீவுக் கடற்பரப்புவரை மோட்டார் விசைப்படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலைச் செய்ய முடிகிறதோ அதே போன்று யாழ். கடல் நீரேரியிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றிய வி.கே.ஜெகன் எம். பி. பல்வேறு விடயங்களை அங்கு முன்வைத்தார்.

**சாரதாம்பாள் கொலை**

புங்குடுதீவில் இளம் அந்தணப் பெண் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டபின் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சாரதாம்பாளின் படுகொலையை ஈ. பி. டி. பி. வெளிப்படுத்தியதற்காக எமது கட்சி உறுப்பினர்கள் தற்போது புங்குடுதீவில் கடற்படையினரால் கடுமையான சோதனைக்கு ஆளாகிவருகின்றனர். எனக் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் புங்குடுதீவில் தங்கியிருந்து கடற்படையினரை விசாரித்து வருவதாகவும் இதுவரை சுமார் 40 கடற்படையினர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**சிவகுமாரின் சிலை**

தொடர்ந்து வி.கே.ஜெகன் குறிப்பிடுகையில் தமிழ் மக்களின் உரிமை உணர்ந்த நிலை சிவகுமாருக்கு வலிகிழக்குப்பிரதேச சபையினதும் உரும்பிராய் மக்களினதும் ஒத்துழைப்புடன் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரின் அனுமதியுடன் ஈ. பி. டி.பி.யால் சிலை ஒன்று உருவாக்கப்பட்டது.

ஆனால்இச்சிலையை நிறுவுவதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது. தியாகி சிவகுமாரின் பொதுவான தியாக உணர்வுடனேயே தமிழ் மக்கள் நோக்குகிறார்கள்எனவேஅவரின் சிலையை நிறுவுவதற்கு இராணுவம் விதித்த தடை உடன் நீக்கப்படவேண்டும். எனவும் கேட்டுக்கொண்டதுடன்.

கப்பல் கட்டணம் 500 ரூபா முதல் 750ரூபாவரையே அறவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். [த]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.